செய்தி வெளியீடு எண்: 480 நாள்: 24.07.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.7.2018) காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், ‘‘தமிழ்நாடு மாநில வனக்கொள்கை 2018’’ புத்தகத்தை வெளியிட, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தனித்துவம் வாய்ந்த பூகோள, பருவநிலை, மண் சார்ந்த சூழலியல், சுற்றுப்புறம் மற்றும் மக்கள்தொகை போன்ற சிறப்பியல்புகளை தமிழ்நாடு தன்னகத்தே கொண்டுள்ளதால், நம் மாநிலத்திற்கென தனியே ஒரு மாநில வனக்கொள்கை இருக்கவேண்டியது அவசியமாகிறது. எனவே, இயற்கை வளங்கள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாத்தல், சூழலமைப்புகள் மற்றும் அவற்றின் மரபியல் வகைகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலை பராமரித்தல், வன உற்பத்தித் திறனை பெருக்குதல், வனங்களில் நீர் வள ஆதாரங்களை அதிகரித்தல் மற்றும் பருவநிலை மாறுபாட்டினை சீர் செய்ய மரங்கள் அடர்ந்த பகுதிகளைப் பெருக்குதல் போன்றவற்றை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாநில வனக்கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

வன மற்றும் வன உயிரின மேம்பாட்டிற்காக வரவு செலவு திட்டத்தில் 2.5 விழுக்காடு ஒதுக்கீடு செய்ய தேசிய வன ஆணையம் பரிந்துரை செய்துள்ளதைத் தொடர்ந்து, இவ்வனக் கொள்கையின் இலக்கினை அடைய ஆண்டுதோறும் வனத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இனிவரும் காலங்களில் வனங்கள் மற்றும் மரங்கள் மூலம் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மாநில வனக்கொள்கையின் அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப.,

முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) திரு.ஆர்.கே. உபாத்யாய், இ.வ.ப., முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (தலைமை வனஉயிரின காப்பாளர்) திரு.டி.பி. ரகுநாத், இ.வ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.7.2018**